**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் நாள் புதன்கிழமை

**<u>O.S. No.147/2024</u>**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.2 வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A. LL.B., (HONS) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அடைக்கலதாஸ் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | கேபிரியேல் | கிராமம் | : | வடவேர் |
| | | | தொழில் | : | விவசாயி |
| | | | வயது | : | 60 |

<u>குறுக்கு விசாரணை</u>

நான் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் உடன்பிறந்த சகோதரன் என்றால் சரிதான். வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணம் செய்யப்பட்ட காலக்கட்டத்தில் எனது தகப்பனாரும், நானும் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளும் வேலை செய்து வருமானம் ஈட்டிக் கொண்டிருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தினை நாங்கள் கிரயம் பெறும் போது கிரய ஆவணத்தில் சாட்சியாக யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தை எழுதும் போது வாதிக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் இடையேயான வயது வித்தியாசம் எனக்கு தெரியுமா என்றால் தற்போது எனக்கு தெரியாது. எனக்கும் வாதி, 1, 2 பிரதிவாதிகளுக்கும் மூத்த சகோதரி ஒருவர் உள்ளரா என்றால் உள்ளார் தற்போது இறந்துவிட்டார். வழக்கு சொத்தின் புல எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் எனக்கு 200 குழி பங்கு உள்ளது என்றால் அது எனது தகப்பனார் சொத்து அதில் 5 பேருக்கும் பங்கு உள்ளது. வழக்கு சொத்தில் உள்ள 200 குழியை நான்மட்டுமே சாகுபடி செய்ததற்கான காரணம் என்னவென்றால் அது எனது தகப்பனார் என்னிடம் கொடுத்து சாகுபடி செய்ததற்கு எனக்கு கொடுத்தார். தாவா சொத்திற்கும் மேற்படி 200 குழிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் கிராம நிர்வாக

அலுவலரிடம் வழக்கு சொத்து தொடர்பாக எந்த அடங்கலும் சிட்டாவோ எந்த காலத்திலும் பெறப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் எந்த விதமான பயிர்காப்பீடுகளும் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை அடமானமாக வைத்து 1, 2 பிரதிவாதிகள் எந்த விதமான தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலேயோ அல்லது வேறு வங்கியிலேயோ தொகை ஏதும் பெறவில்லை என்றால் சரிதான். 40 வருடங்களாக வாதி அனுபவித்து வருகிறார் என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் கூட்டுறவு வங்கியில் வழக்கு சொத்தை அடமானம் வைத்துள்ளார். மற்ற ஆவணங்களை பற்றி எனக்கு தெரியாது. வழக்கறிஞர் தான்கேட்க வேண்டும். என்னுடைய தகப்பனாரும், 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான கேபிரியேல் என்பவரின் பெயரில் உள்ள சொத்துக்களையும், 3ம் நபர் பெயரில் உள்ள சொத்துக்களையும், வழக்கில் தாவா சொத்தாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கேபிரியேல் பெயரில் உள்ள சொத்துக்களை யாருக்கும் எழுதி வைக்காமலேயே இறந்து விட்டார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை எனது தகப்பானர், வாதி , 1, 2 பிரதிவாதிகள் இணைந்து வாங்கினார்கள் என்றாலும், வாதி மூத்தவர் என்பதால் குடும்ப நலனுக்காக வாதியின் பெயரில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் மூத்த சகோதரிக்கோ, 1, 2 பிரதிவாதிகளுக்கோ பங்கு கொடுக்காமல் எனக்கு மட்டும் பங்கு கொடுத்துள்ளதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக வடவேர் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் 2ற்கும் மேற்பட்ட முறைகள் பேசப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.11.12 13:49:32 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal